# நீல வானமே நீ சொல்வதென்ன?

## P.V. JESUDAS

தேவனுடைய கிருபையும், இறக்கமும், சமாதானமும், உங்களோடு இன்றும் என்றும் எப்பொழுதும் இருப்பதாக!

**உ**லகத்தின் பெருமக்களான அநேகரின் சரித்திரத்தை நான் வாசித்திருக்கிறேன். அதிலே அமெரிக்க நாட்டின் குடியரசு தலைவராக இருந்த ரூஸ்வெல்ட், இன்றைக்கு அமெரிக்கர்களின் உள்ளத்தை கவர்ந்தவர்.



Franklin Delano **Roosevelt** (January 30, 1882 – April 12, 1945),

அந்த பிரதமர் அமெரிக்க நாட்டின் பிரதமராக இருந்த சமயத்திலே, அந்த நாடு வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. ரஷிய நாடு பலம் வாய்ந்ததாக முன்னேறி சென்று கொண்டிருந்தது. பிறகு சீனா நாடும் முன்னேறி கொண்டிருந்தது.

பக்கத்து தீவுகளிலே காஸ்ட்ரோ என்பவர் வந்து அமெரிக்கா நாட்டிலே கம்யூனிஸ்டை புகுத்தவேண்டும் என்று தீவிரித்துக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட சிக்கலான காலத்தில், அந்த பிரதமர், அமெரிக்காவை ஸ்திரப்படுத்தி மகா உன்னதமான நிலைமைக்குக் கொண்டுவந்தார்.

அவருடைய வாழ்வில் ஏராளமான பிரச்சனைகள் இருந்தது. அப்படி அவர் தன் பிரச்சனைகளை சந்திக்கும் போதெல்லாம்



தன்னுடைய வீட்டைவிட்டு வெளியே வந்து இரவு நேரங்களில், வானத்திலிருக்கும் நட்சத்திரங்களை சுற்றும் முற்றும் பார்த்து, உன்னதமான ஆண்டவரே! எனக்கு ஒத்தாசை செய்யும் என்று சொல்லி, அவர் திரும்ப தன் வீட்டுக்குள்ளே போவாராம்.

வானத்தை பார்த்து இறைவனின் கைகளில் தன் பிரச்சனைகளை ஒப்புகொடுத்து, அமெரிக்க நாட்டை பெரும்படியாக உருவாக்கினார். இன்றைக்கு நமக்கு முன்பாக இருக்கும் ஏராளமான பிரச்சனைகளை வைத்துக்கொண்டு வானத்தை பார்த்து வாழ்வோமென்றால், நம்முடைய எல்லா விதமான பிரச்சனைகளும் தீர்ந்து சந்தோஷமாக வாழ்வோம் என்பதில் எந்தவொரு சந்தேகமுமில்லை.

**உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும் அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது.**
**– ஏசாயா 40:26.**


தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை, இயேசு இந்த பூமியிலிருந்து வானத்தை நோக்கிப் பார் என்கிறார். அந்த நீல வானத்தில் தோன்றுவது என்ன? அந்த வானத்தில் தோன்றுகிற நட்சத்திரங்கள் சொல்வதென்ன? நம்முடைய வாழ்வுக்கு அவைகள் வழிகாட்டிகளாகுமா?

ஆகவே உங்கள் கண்களை ஏறெடுத்து, அந்த நட்சத்திரங்களை பாருங்கள் என்று ஆண்டவர் நம்மை நோக்கி ஒரு அழைப்பை விடுவிக்கிறார். நம்முடைய கண்களை நாம் ஏறெடுத்து பார்க்கும்போது, நாம் எதை காண்கிறோம்? என்பதை நாம் அறிந்துக்கொள்ளவேண்டும்.

5 வது நூற்றாண்டிலே, கிறிஸ்துவுக்கு முன்பாக வாழ்ந்த ஒரு பெரிய கிரேக்க வானசாஸ்திரியின் பெயர் அனக்சிகரஸ். அவர் ஒரு சமயத்திலே எழுதும்போது, சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் ஆகியவற்றைப் பற்றி நாம் தெரிந்துக் கொள்ளவேண்டும். நம் பிறப்பின் நோக்கமே அதுதான் என்று உறுதியாக சொன்னார். ஏனென்றால், உலகத்திற்கு காலையிலே பிரகாசிக்கிற அந்த சூரியன்களுக்குதான் நட்சத்திரம் என்று பெயர். தன்னில்தானே சுய ஒளியுடைய அந்த பிம்பங்களுக்கு நட்சத்திரங்கள் அல்லது சூரியன்கள் என்று பெயர். இன்றைக்கு இந்த வானமண்டலத்தை ஆராய்ச்சி செய்து, விஞ்ஞானிகள் நமக்கு

பல காரியங்களை சொல்லியிருக்கிறார்கள்.

**1609**–ஆம் ஆண்டிலே, இத்தாலி நாட்டை சேர்ந்த கலிலேயா என்று சொல்லப்பட்ட ஒரு வானசாஸ்திரி தூரதிருஷ்டி கண்ணாடியை உருவாக்கினார்.



**GALILEO GALILEI 1564-1642**

அதன்மூலமாக அவர் பார்த்தபோது அநேக ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களையும் சூரியன்களையும் கண்டார். நம்முடைய உலகத்தில் இருக்கும் சுற்றுபுறமுள்ள பல கிரகங்களையும் கண்டார்.

**1668**–ஆம் ஆண்டிலே நியுட்டன் என்று சொல்லப்பட்ட விஞ்ஞானி, இன்னொரு பெரிய தூரதிருஷ்டி கண்ணாடியை உருவாக்கினார். அதிலே அவர் பார்த்தபோது, இன்னும் அதிகமான நட்சத்திரங்களையும் சூரியன்களையும் கண்டார். **1937**–ஆம் ஆண்டிலே, அமெரிக்காவை சேர்ந்த க்ரோட்டி ராபர்ட் என்று சொல்லப்பட்ட ஒரு விஞ்ஞானி ரேடியோ டெலஸ்கோப்பை உருவாக்கினார். ரேடியோ கதிர்களை இந்த தூரதிருஷ்டி கண்ணாடியோடு இணைத்து, மற்ற உலகங்களிலிருந்து வருகிற சத்தங்களையும், இன்னும் மற்ற காரியங்களையும் ஆராய்ச்சி செய்தார். பின்பு இப்பொழுது சேட்லைட் என்ற செயற்கைகோலை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை வைத்து அநேக மாயிரம் தூரத்திற்கு அப்பால் இருக்கும் அதிக கிரகங்களையும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

இப்படி அறிவு பெருகிகொண்டுபோக, மக்கள் இந்த வானமண்டலத்தை அதிகமாக ஆராய ஆரம்பித்தார்கள். **1948**–ஆம் ஆண்டிலே ஏல் டெலஸ்கோப்பு ஒன்றை கலிபோர்னியாவிலே, அவர்கள் உருவாக்கி **35** கோடி மைல் அப்புறமாக இருக்கும் நட்சத்திரங்களை படம் பிடித்தார்கள். ஆகவே, இந்த பெரிய தூரதிருஷ்டி கண்ணாடிகளை வைத்துக்கொண்டு நாம் பார்க்கும்



போது, வானத்திலே நாம் என்ன பார்க்கிறோம்? என்பதை குறித்து சற்று ஆராய்வோம்.

வானசாஸ்திரிகள் இந்த வானத்தை அளப்பதற்காக ஒளி வருஷம் என்ற காரியத்தை கொண்டுவந்தார்கள். ஒளி வருஷம் தூரம் என்றால் என்ன? நாம் பார்க்கிற வெளிச்சம் ஒரு வினாடிக்கு லட்சத்து எண்பத்து ஆராயிரத்து இருநூற்று எண்பத்திரண்டு மைல் பிரயாணம் செய்கின்றன. நாம் சுவிட்சை போட்டோமென்றால், விளக்கு எறிகிற வேகம் இந்த பூமியை எட்டு முறையாவது ஒரு வினாடிக்கு சுற்றி வந்துவிடும். அவ்வளவு வேகம் அது பிரயாணம் செய்கின்றன. அப்படியே, ஒரு மணி நேரத்திற்கு அறுபத்து ஏழு கோடி மைல் தூரம் பிரயாணம் செய்கிறது.

இப்படியாக ஒரு வினாடி, ஒரு மணி நேரம், ஒரு நாள் என்று எவ்வளவு தூரம் என்பதை அறியவே இந்த ஒளி வருஷம் தூரம் என்ற காரியத்தினால் கணக்கு பார்க்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு ஐந்து லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் கோடி மைல் இந்த வெளிச்சம் பிரயாணம் செய்கிறது. அப்படியென்றால், ஒரு ஒளிவருஷத்தின் தூரம் எவ்வளவு என்றால் மேலே குறிப்பிட்ட மைல்தூரம்தான்.

அந்த கணக்குப்பிரகாரம் நாம் சில காரியத்தை குறித்து பார்ப்போம். நம்முடைய இந்த சூரிய வட்டத்திலே நாம் காண்கின்ற சூரியன் சந்திரன் இன்னும் ஒன்பது கிரகங்களின் அளவை குறித்து பார்ப்போம்.

நம்முடைய சூரியனை சுற்றி ஒன்பது கிரகங்கள் சுற்றுகிறது. அந்த ஒன்பது கிரகங்களில் ஒன்று நம்முடைய பூமியாகும். சூரியனுக்கு அடுத்தபடியாக மூன்று கோடி மைல் அப்புறமாக புதன் என்ற ஒரு கிரகம் இருக்கிறது. நம்முடைய உலகத்தைவிட மூன்றில் ஒரு பங்குதான் அதன் அளவு இருக்கிறது. அதிலே இருந்து இரண்டரை நிமிடம் பிரயாணம் செய்வோமானால் அதாவது ஒளிவருஷம் தூரம் கணக்கின்படி இரண்டரை கோடி மைல் தூரத்தில் விடிவெள்ளி அதாவது வீனஸ் என்ற கிரகம் இருக்கிறது. அதற்கு அப்புறமாக மூன்று நிமிடம் பிரயாணம் செய்தால் ஏறகுறைய மூன்று கோடி மைல்களுக்கு அப்புறம் நம்முடைய கிரகம் இருக்கிறது. நம்முடைய உலகத்தை தாண்டி ஐநூற்று ஐம்பத்தைந்து லட்சம் மைல்தூரத்தில் செவ்வாய் என்ற கிரகம் இருக்கிறது.

அதிலிருந்து முப்பது நிமிடம் பிரயாணம் செய்தால், அதாவது முப்பத்து மூன்று கோடி அறுபது லட்சம் மைல்களுக்கு அப்புறம் குரு என்ற கிரகம் (ஜூபிடர்) இருக்கிறது. அதற்கு அப்புறம் முப்பத்தாறு நிமிடம் பிரயாணம் செய்தால் எண்பத்து நாலு கோடி மைல்களுக்கு அப்புறம் யுரானஸ் என்ற கிரகம் இருக்கிறது. அப்புறம் தொன்னூறு நிமிடம் பிரயாணம் செய்தால் நெப்ட்யுன் என்ற கிரகம் இருக்கிறது. கடைசியாக ப்லோட்டோ என்ற கிரகம் கடைசி இருக்கிறது.

ஆனால், இந்த டெலஸ்கோப் மூலமாக நாம் பார்க்கும்போது இந்த வானமண்டலத்திலே நம்மைபோல அநேக சூரியவட்டங்கள் அங்கு இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய சூரியன் ஆரஞ்சு நிறத்திலே இருக்கிறது. நம்முடைய உலகத்தைவிட பதிமூன்று லட்சம் அளவு பெரியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூரியன்கள் தனிதனியாக ஆங்காங்கே இருக்கிறது. அவைகளை சுற்றிலும் கிரகங்கள் ஓடுகின்றது. அப்புறம் ஆராய்ச்சி செய்துபார்த்தபோது இரண்டிரண்டு சூரியன்கள் ஒன்றையொன்று சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படி அநேக சூரியன்கள் தன்னைதானே சுற்றிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய பால்வீதி மண்டலத்தில் பண்ணிரண்டு கோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன. இந்த பால்வீதி மண்டலத்தை குறித்து இந்துக்கள், அந்நாளிலே ஆகாசவானி என்று சொன்னார்கள். இந்த பால்வீதி மண்டலத்திலே அநேக சூரியன்கள், நம்முடைய சூரியனைவிட பல ஆயிரம் மடங்கு பெரியதாக இருக்கிறது. அதேபோல ஏராளமான பால்வீதி மண்டலங்களும் இருக்கின்றன.

**பால்வீதி மண்டலம்**





வானத்தில் ஏராளமான நட்சத்திரங்களை சுற்றி ஓடுகின்ற கிரகங்களை சுற்றி ஓடுகின்ற சந்திரன்களும் உண்டு. இதை அனைத்தையும் நாம் பார்க்கும்போது, திருமறையிலே ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னதாகவே ஆபிரகாம் என்ற பக்தனை ஆண்டவர் வெளியே அழைத்துகொண்டுபோய்

**அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். – ஆதி. 15:5.**

வானத்திலிருந்த நட்சத்திரங்களை ஆண்டவர் எண்ணச் சொன்னார்.

**வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறதுபோல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். – எரேமியா 33:22.**

இங்கு வானத்து நட்சத்திரங்கள் கடற்கறை மணலைப் போல எண்ணப்படாததுமாயிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது.

மிக பிரமாண்டமான இந்த உலகங்களின் மத்தியிலே, நம்முடைய உலகம் ஒரு சிறு உலகம்தான். நம்முடைய உலகத்தை ஆண்டவர் நேசித்தார் என்று வேதம் சொல்லுகிறது. இந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றையும் ஆண்டவர் வழிநடத்தி வருகிறார். அவைகள் மிக வேகமாக தன்னுடைய பாதையிலே பயணம் செய்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய சூரியன் இந்த எல்லா கிரகங்களையும் இழுத்துக்கொண்டு வினாடிக்கு பண்ணிரண்டரை மைல் வேகமாக போய் கொண்டிருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கு நாற்பத்தைந்தாயிரம் மைல் பிரயாணம் செய்கிறது.

நம்முடைய உலகம் இந்த சூரியனை சுற்றி, வினாடிக்கு பதினெட்டு மைல் ஓடிக் கொண்டிருக்கிறது. வான சாஸ்த்திரத்தை படித்தவர்கள் இத்தனை உலகங்களா என்று பிரமிக்கிறார்கள். இந்த வான சாஸ்த்திரிகள் இவ்வளவு நட்சத்திரங்களையும் சூரியன்களை யும் நடத்துகிறவர் யார்? என்ற பெரிய கேள்வியை எழுப்பு கிறார்கள்.

இன்றைக்கு மனிதன் ஓரளவு படித்துவிட்டு கடவுள் இல்லை என்று சொல்லுகிறான். வேதம் என்ன சொல்லுகிறது?

**வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.**

**பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.**

**– சங்கீதம் 19: 1–6.**

இந்த நட்சத்திரங்கள் யாவும் தேவனுடைய கிரியைகளையும், அவருடைய மகிமையையும் வெளிப்படுத்துகிறது என்று வாசிக்கிறோம்.

**உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும் அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது. – ஏசாயா 40:26.**

வானத்திலுள்ளவைகளை நாம் பார்க்கும்போது, நாம் கேட்கும் முதல் கேள்வி என்னவென்றால், இந்த உலகத்தையும் வானத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் படைத்தவர் யார்? என்ற கேள்விக்கு வேதம் பதில் தருகிறது.

**1798–** ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டில், ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது. அந்த புரட்சியின் நோக்கம் 'கடவுள் இல்லை' என்றும் பகுத்தறிவே நம் தேவன் என்றும் சொன்னார்கள். அந்த நாட்டின் சிப்பாய்கள், அந்த நாட்டில் இருந்த அனைத்து கிறிஸ்தவ கோவில்களையும் இடித்தார்கள். அப்பொழுது ஒரு கோவிலின் மூப்பர், கோவிலை இடிக்காதீர்கள் என்று கண்ணீர் விட்டு அழுதார். ஆனால் சிப்பாய்கள் கேட்பதாக இல்லை.

கடவுள் என்ற ஞாபகம் உங்கள் மனதிலே இருக்கிறது. அதை வேரோடு அழித்துவிடபோகிறோம் என்று அந்த சிப்பாய்கள் சென்னார்கள். அப்பொழுது அந்த மூப்பர்: கோவில்களை இடித்து, அவைகளை தரைமட்டமாக்கலாம். ஆனால், இறைவன் என்ற கொள்கையை தரமட்டமாக்கமுடியாது, அதை எங்கள் மனதி லிருந்து எடுத்துபோடவும் முடியாது, நாங்கள் வானத்தை நோக்கி பார்ப்போம், அதை உங்களால் ஒன்றும் செய்துவிட முடியாது என்று சொன்னார்.

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது என்று வேதம் சொல்லுகிறது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று



திருவள்ளுவர் சொன்னார். ஆண்டவர்தான் இந்த உலகத்தை படைத்தார் என்று அவர் சொன்னார்.

'சூரியன் வருவது யாராலே? சந்திரன் தெரிவது எதனாலே? யார் இதற்கெல்லாம் அதிகாரி? இதை நாம் அறிந்திட வேண்டாமோ?' என்று கவி மணி தேசிய வினாயகம்பிள்ளை பாடினார். நம்முடைய முற்பிதாக்கள், இறைவன் உண்டு என்று வழிப்பட்டு இறைவனை அதிகமாக வணங்கினார்கள். இந்த உலகத்தில் நாம் யாரும் அநாதைகள் அல்ல!

குரங்கிலிருந்து வந்தோம், என்று மனிதன் இன்றைக்கு சொல்லுகிறான். அப்படியானால், குரங்கு வம்சம் ஏன் இன்னும் அழியாமல் உற்பத்தியாகக்கொண்டேயிருக்கிறது? குரங்கிலிருந்து மனிதர்கள் ஏன் இன்னும் தோன்றுவதில்லை? அந்த குரங்குகள் நமக்கு அடைக்கலமாக இருக்கமுடியுமா? நமக்கு ஆதரவு அளிக்க முடியுமா? நம்மை பாதுகாக்க முடியுமா? அப்படியல்ல! அண்ட சராசரங்களை படைத்த ஒரு பெரும் வல்லமையான கரம், நித்திய புயம், அநாதி கரங்கள் நமக்கு அடைக்கலமாகவும், ஆதரவாகவும், தாங்குவதற்கும், ஏங்குவதற்கும், நடத்துவதற்கும் அவர் நமக்கு உண்டு என்று வேதம் சொல்லுகிறது. தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற ஒரு பெரிய நம்பிக்கையை அந்த நட்சத்திரங்கள் சொல்லுகிறது!

வானத்திலிருக்கும் நட்சத்திரங்கள் மிக பிரமாண்டமாக இருக்கிறது. நம்முடைய உலகம் **8000** மைல் விட்டமாக இருக்கிறது. இந்த உலகத்தைவிட சூரியன் பதிமூன்று மடங்கு பெரியதாயிருக்கிறது. இவைகள் யாவற்றையும் நாம் பார்க்கும் போது, மனிதனாகிய நாம் எம்மாத்திரமாக இருக்கிறோம்?

**மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். – சங்கீதம் 8:4.**

இந்த அண்டசராசரங்களை நாம் பார்க்கும்போது, நம்மு டைய உலகம் ஒரு சிறிய தூசியாக இருக்கிறது. எவ்வளவு படித்தால் என்ன? நாம் எவ்வளவு அறிந்தால் என்ன? நாம் எவ்வளவு ஞானவான்களாக இருந்தால் என்ன? மனிதர்களாகிய நாம் தெரிந்துக்கொள்ளவேண்டிய ஒரே பெரிய உண்மை என்னவென்றால், நாம் தூசிக்கு தூசியாயும், சாம்பலுக்கு சாம்பலாயும் இருக்கிறோம். தேவனுடைய பார்வைக்கு நாம் தூசியாக இருக்கிறோம். மனித ஜாதிகளாகிய நம்மை, ஆண்டவர் தூசுகள் என்று சொல்லுகிறார்.

**இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலே படியும் தூசிபோலவும், எண்ணப்படுகிறார்கள்; இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார். –ஏசாயா 40:15.**

என் தந்தை தினமும் காலையில் எழுந்து குளித்துவிட்டு, திருநீர் பூசிக் கொள்வார். அப்பொழுது நான் என் தந்தையிடம்: அப்பா! எதற்காக இந்த திருநீரை பூசிக்கொள்கீறீர்கள்? என்றேன். என் தந்தை: இந்த திருநீர் என்பது மண்சாம்பலாக இருக்கிறது, அதை நம் நெற்றியிலே வைத்துக்கொள்ளும்போது, மனிதனே! நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய், ஆகவே நீதியை செய், நியாயத்தை செய், இறைவனை நோக்கி பார் என்றார்! மனிதர்கள் மேண்மைப் பாராட்டுவதற்கு எதுவமே கிடையாது.

தேவ தூதர்கள் இந்த உலகங்களை வழிநடத்துகிறார்கள். யாவும் அந்தந்த பாதையிலே ஓடிக் கொண்டிருக்கிறது. நேருக்கு நேராக மோதிக் கொள்வதில்லை! ஆகவே எந்தவிதமான ஆபத்து மில்லை.

இப்பேர்ப்பட்ட நட்சத்திரங்களை வழிநடத்துகிற ஆண்டவர், இந்த ஏழை பிள்ளைகளாகிய நம்மையும் வழி நடத்துகிறார். நம்மு டைய குடும்பத்தையும் வழிநடத்துகிறார். என்ன ஆகுமோ என்று தேவனுடைய பிள்ளைகள் திகைக்கவேண்டிய அவசியமில்லை.

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். – சங்கீதம் 32: 8.**

**இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. – ஏசாயா 48:17.**

நம்மை வழிநடத்தக்கூடிய அந்த ஆண்டவர், நமக்கு என்ன நேரிடும் என்பதை அறிந்து, நாம் பதறாதபடி, நமக்கு துன்பம் வராதபடி தம்முடைய பிள்ளைகளை நிச்சயமாக பாதுக்காக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் பக்கம் வந்து பாளயம் இறங்கினபோது, அவர்களை மறுபடியும் பிடித்துக் கொண்டுப் போகத்தக்கதாக அந்த பார்வோன் இரண்டு லட்சம் காலாட் படையோடும் அறுநூறு இரதங்களோடும், இருபதினாயிரம் குதிரை வீரர்களோடும் கூட வந்தான் என்று எகிப்தின் சரித்திர புத்தகத்தில் எழுதியிருக்கிறது. அந்த இடத்தை நான் நேரில் போய் பார்த்தேன். அது 30 மைல் கடலாகவும், இருபுறமும் மலைகளும், ஆழமும் இருந்தது. ஆகவே இஸ்ரவேல் ஜனங்கள் எப்பக்கமும் தப்பிப்போக முடியாத நிலமையிருந்தது.





மலை மீதும் ஏறமுடியவில்லை, எனென்றால் அந்த மலைமீது ஏராளமான விஷக் கிருமிகள் இருந்தன. ஆகவே அந்த மலையில் ஏறினால் மடிந்துபோவார்கள். எப்பக்கமும் வழியில்லை! அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் ஆண்டவரை நோக்கி அபயமிட்டார்கள். ஆகவே மோசே, ஆண்டவரை நோக்கி கூப்பிட்டார். கர்த்தர் அந்தக் கடலை இரண்டாக பிளந்தார்.

ஆகவே எப்பக்கமும் பிரச்சனைகள் வந்தாலும், தேவனை முன்வைத்து முன்னேறி செல்லவேண்டும். நேராக போகும் பாதையை அவர் செவ்வைப்படுத்துகிறார்.

வானத்திலிருக்கும் நட்சத்திரங்களை எப்படி காப்பாற் றுகிறார்? ஆயிரமாயிரம் வருஷமானாலும், அவைகள் எப்பவும் அணையாமல் எரிந்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே அவைகள் எரிந்தாலும் சிறிதாவதில்லை! அழிந்தும் போகாது. அப்படியென்றால் ஆண்டவர் அவைகளை எப்படி தாங்குகிறார்? என்று ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது, மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

**ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? – மத்தேயு 6:26.**

இந்த அண்டசராசரங்களில் உருண்டோடுகிற எத்தனையோ சூரியன்களையும் சந்திரன்களையும் பார்க்கிலும், ஆண்டவர் நம்மை விசேஷமாக வைத்திருக்கிறார்! பறவைகளையும் மிருகங்களையும்

போஷிக்கிற கர்த்தர், நம்மை போஷிக்கமாட்டாரா?

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். - 1 பேதுரு 5:7.**

எந்தவிதமான கவலைகள் இருந்தாலும், அவர் தம்முடைய தோளின்மேல் சுமக்கக் காத்து நிற்கிறார். வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவரே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட அழைப்பு நமக்கு வேறு எங்கிருந்தும் வராது. அது எப்பேர்ப்பட்ட பாரமாக இருந்தாலும், நீங்கள் என்னிடத்தில் வாருங்கள் என்று அன்பாய் அழைக்கிறார்.


**நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்துதிரிகிறதையும் நான் காணவில்லை. – சங்கீதம் 37:25.**

**சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. – சங்கீதம் 34:10.**

ஒரு தகப்பன் தன் பிள்ளையை தோளின்மேல் சுமந்து செல்லுவதுப் போல நம்மையும் கர்த்தர் சுமப்பார்.

நட்சத்திரங்கள் வேகமாக ஓடும்போது, நேருக்கு நேராக மோதுவதில்லை. ஆண்டவர் அவைகளை காப்பாற்றுகிறார். எந்தவிதமான விபத்தும் ஆபத்தும் அவைகளுக்கு ஏற்படுவதில்லை. நம்முடைய உலகத்தைச் சுற்றி 22 கிலோ மீட்டரிலிருந்து 32 கி.மீ வரைக்கும் ஆண்டவர் இயற்கையாக ஒரு பாதுகாப்பை வைத்திருக்கிறார். அந்த பாதுகாப்பு, மற்ற இடங்களிலிருந்து வருகிற விஷக் கதிர்களை தடுத்து நம்முடைய உலகத்தின் உள்ளே விட்டுவிடாமல் பாதுகாக்கிறது. அந்த விஷக் கதிர்கள் மட்டும் இந்த உலகத்தின் உள்ளே வருமென்றால் நம்முடைய தோளிலே கேன்சர் வியாதி ஏற்படும். நம்முடைய விளைச்சல்களும் அழிந்துபோகும். இப்படி வந்து அழிக்காமலிருக்க கர்த்தர் அந்த பாதுக்காப்பை வைத்திருக்கிறார். ஆகவே நாம் சுகமாக வாழுகிறோம். இருந்தாலும் இந்த பூமியில் நாம் உபயோகிக்கும் பெட்ரோல், வாகன புகைகள் யாவும் அந்த பாதுக் காப்புக்குச் சென்று பெரும் ஓட்டையிட்டு, இந்த உலகத்தில் அதிகமாக கேன்சர் வியாதியை கொண்டு வருகிறது. அந்த ஓட்டையின் அளவு அமெரிக்க நாடு முழுவதின் அளவாக இருக்கிறது. அந்த ஓட்டை அமெரிக்க நாட்டுக்கு மேலேதான் உள்ளது. மிக பிரமாண்டமான ஓட்டையாக இருக்கிறது. அடுத்தப் பக்கத்திலிருக்கும் படத்தை காண்க.





தேவன் நமக்கு அடைக்கலத்தையும் பெலனையும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமுமாயிருக்கிறார் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். நீ மரணத்தின் பள்ளதாக்கிலே நடந்தாலும் எந்த பொல்லாப்பும் உனக்கு நேரிடாது என்று 23–ஆம் சங்கீதத்திலே நாம் வாசிக்கிறோம். நீ தண்ணீர்களை கடக்கும்போது நான் உன்னோடுக் கூட இருப்பேன், அது உன் மேல் புரண்டு வருவதில்லை என்று ஏசாயா 43 அதிகாரத்திலே கர்த்தர் சொல்லுகிறார்.

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். – சங். 34.7.**

கர்த்தருடைய பிள்ளைகளைமீறி எந்த சக்தியும் நம்மை அனுகாது. தேவதூதர்கள் நமக்கு பாதுக்காப்பாக இருக்கிறார்கள்.

அண்டசராசரங்களை படைத்த ஆண்டவர், நம்மை நேசிக்கிறவராகவே இருக்கிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு இறங்குவதுபோல கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இறங்குகிறார்.

**இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். – சங். 147:3.**

ஒரு மந்தையிலே எத்தனை ஆடுகள் இருக்கிறது என்று எப்படி மேய்ப்பனுக்கு நிச்சயமாக தெரியுமோ, அப்படியே

எத்தனையோ கோடான கோடி நட்சத்திரங்கள் இருந்தாலும் தேவன் அவைகளை கணக்கிட்டு வைத்திருக்கிறார்.

**அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். – சங். 147:4.**

**உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. – மத். 10:30.**

நாம் இந்த உலகத்தின் பாவங்களிலிருந்து விடுபட்டு, தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிற அந்த பரலோக ராஜ்யத்திலே போகத்தக்கதாக தம்முடைய ஜீவனையும் அந்த கல்வாரி சிலுவையிலே அவர் பலியாக கொடுத்தார் என்று வேதம் சொல்லுகிறது. வானமண்டலங்களை பாருங்கள், அங்கு ஓடுகிற நட்சத்திரங்களை பாருங்கள், அவைகள் நமக்கு என்ன சொல்லு கிறது? **நமக்கு ஒரு ஆண்டவர் இருக்கிறார்** என்று சொல்லு கிறது.

**ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட் படுத்துகிறவர்கள் – தானி. 12:3.**

நம்மை எப்படியெல்லாம் வைக்கப்போகிறார் என்று பாருங்கள். அந்த நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கப் போகிறோம். மரித்த பிறகு மண்ணுக்குள்ளே சென்று மக்கிப் போகிறோம். நாளை விண்ணிற்கு சென்று விண்ணவர் களாகுவோம். கர்த்தரின் கைகள் ஏந்தி நிற்கும் கைகளாக இருக்கிறது. அவைகள் கீழே இறங்காது. நாம் இரட்சிக்கப்பட எல்லா முயற்சிகளும் அவர்தான் செய்கிறார். ஆகவே தாமதமில்லாமல் எல்லா முயற்சிகளோடும் நாமும் அவரைத் தேடவேண்டும். பரலோகத்தின் தேவன் இந்த புத்தக்தைப் படிக்கும் அனைவரையும் ஆசீர்வதிப்பாரக! – ஆமென்.

# “என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக.” – நீதி. 23:26.